சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No.OS. 112/2023**

2025ம் ஆண்டு ஜுலை மாதம் 25ம் நாள் வெள்ளிக்கிழமை

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய **பி.வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிச்சை | தொழில் | |
| தந்தை பெயர் | முருகேசன் | ஜாதி | |
| கிராமம் | மொரப்பந்தாங்கல் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 49 |

**25.07.2025 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, நடப்பா என்ற சின்ன குழந்தை இறப்பு சான்று அசல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.05.2012 தேதியிட்ட தானபத்திரம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சின்னகுழந்தை பெயரில் உள்ள பட்டா எண்.339க்கான கணினி பட்டா **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.3710க்கான கணினி பட்டா **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.08.2013 தேதியிட்ட அடமானக் கடன் பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.04.2023 தேதியிட்ட பைசல் ரசீது அசல் **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.